# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை – 05 | 17–04–2004 | சனிக்கிழமை | ஓசை – 59



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கன்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-48A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-9294) 077-6059672


## அமைச்சர் கதிர்காமர் அடுத்தவாரம் அமெ.பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வரும் வாரங்களில் அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவல் பிரதிச்செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

## மட்டு. நிலைமையை சாதுரியமாகக் கையாண்டு பிரபாகரன் சமாதான முயற்சியைக் காப்பாற்றியுள்ளார்

### அல்-அஸீரா தொலைக்காட்சி பாராட்டு

மட்டக்களப்பு நிலைமையைச் சாதுரியமாகக் கையாண்டு எதிர்ப்புக் குழுவை முறியடித்து விரட்டியடித்திருப்பதன் மூலம் சிறிலங்காவின் சமாதான முன்னெடுப்புக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களால் காப்பாற்றப்பட்டிருப்பதாக அல்-அஸீரா எனும் அரபு செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

மட்டக்களப்பில் தோன்றியிருந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிர்ப்புக் குழுவை முறியடிப்பதற்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பாரிய இரத்தக் களரிக்கு வழிவகுக்கும் என்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டு சிறிலங்காப் படையினரை மோதலுக்கு இழுக்கக் கூடிய சந்தர்ப்பத்திற்கு வழி வகுக்கும் எனவும் அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்த்திருந்தனர். இவ்வாறு மிக எளிமையாக இவ்விவகாரம் கையாளப்படும் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் கட்டாரில் அல்-அஸீரா செய்தி நிறுவனம் ஆச்சரியம் தெரிவித்திருக்கின்றது.

## இந்திய யுத்தக்கப்பல் தாரங்கிரி நேற்று கொழும்பு வந்தடைந்தது

இந்திய யுத்தக்கப்பலான தாரங்கிரி 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதனை நோக்காகக் கொண்டே இந்தக்கப்பலின் விஜயம் இடம்பெறுகிறது.2003 ஆம் ஆண்டு தனது பயணத்தினை ஆரம்பித்த தாரங்கிரிக் கப்பல் இதுவரை 17 நாடுகளின் 37 துறைமுகங்களுக்கு விஜயம்செய்துள்ளது. (32)

# சனாதிபதியின் பேச்சுக்கு முக்கியத்துவமில்லை

# செயல்களின் அடிப்படையிலேயே முடிவெடுப்போம்

## கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்



(லண்டன்)

**சனாதிபதியின் பேச்சுக்களுக்கு நாங்கள் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவருடைய செயல்களின் அடிப்படையில் தான் நாங்கள் முடிவுகளை எடுப்போம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.**

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

கேள்வி: கிழக்கில் கருணாசார்பு உறுப்பினர்களுடன் முரண்பாடுகள் எதுவும் உண்டா? அல்லது அவர்கள் ஒருமித்து செயற்படுகிறார்களா?

பதில்: கருணா சார்பான உறுப்பினர்களென ஒரு பிரிவினர் இருக்கவில்லை நாங்கள் கடந்த வாரம் கொழும்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட வேளையில் மட்டு-அம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர். எமக்கும் அவர்களுக்குமிடையே எவ்வித வித்தியாசமும் இருக்கவில்லை. அதற்கு பின்னர் நாங்கள் வெளியிட்ட அறிக்கையில் அவ்விடயம் தெளிவாக கூறப்பட்டிருந்தமை தெரிந்ததே. எனவே எவ்விதமான ஒரு வித்தியாசமும் எமக்கு இதற்கு முன்பும் இருக்கவில்லை.

கேள்வி: புதிய நாடாளு

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வின்சர் திரையரங்கு வளவில் குழியிலிருந்து இருசடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வின்சர் திரையரங்கு அமைந்துள்ள வளவிலுள்ள குழியொன்றினுள்ளிருந்து வெட்டுக் காயங்களுடன் அழுகிய நிலையில் இருசடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று மாலை மீட்கப்பட்ட இரு சடலங்களில் ஒன்று சத்திர ஒழுங்கை வண்ணார் பண்ணையைச் சேர்ந்த நடராஜா சத்தியலிங்கம் (வயது 43) என்ற குடும்பஸ்தருடையது என இனம் காணப்பட்டாலும் மற்றைய சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டபின் அடையாளம் காணப்பட்ட நபர் கடந்த 12 ஆம் திகதியிலிருந்தே அவரது வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தார் எனத் தெரிவிக்கப் படுகிறது. இனங்காணப்படாத சடலத்திற்குரியவர் இளம் வயதை உடையவர் எனவும் மீட்கப்படும் போது அவரது உடலில் எந்த உடையும் காணப்படவில்லை எனவும் தெரிவிக் கப்படுகிறது. (33)

## தபால்மூலம் வாக்களிப்பு ஆரம்பம்

வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூலவாக்களிப்புகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. இதே வேளை நாளைமறுதினம் வரை தபால் மூலம் வாக்களிக்கலாமெனவும் கூறப்பட்டுள்ளது.

## மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ். மாவட்ட வர்த்தகர்களுடன் நேற்று சந்திப்பு

நாங்கள் யாழ். வர்த்தகர்களை முன்பு இருந்தது போல் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளோம் என மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுக்கும் யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்குமிடையே சந்திப்பொன்று கொக்கட்டிச்சோலையிலுள்ள புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது இச் சந்திப்பின் பின்னர் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில்.

மீண்டும் அவர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும் தங்களுக்கு இனிமேல் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதென்ற நம்பிக்கையுடன் அவர்கள் சென்றார்கள்.

இதேவேளை அவர்கள் முன்பு எங்களை அழுதமுகத்துடன் சந்தித்தனர். ஆனால் நேற்று அதற்கு எதிர்மாறாக மகிழ்வுடன் சந்தித்து சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வர்த்தகர்களுக்கு அநியாயங்கள் நடந்த வேளை சிறிலங்கா படையினர் பாராமுகமாக இருந்தனர். எனவே இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டியது சிறிலங்கா அரசாங்கந்தான் ஏனெனில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிப்பதில் அமெரிக்கா நம்பிக்கையுடன் உள்ளது

### - பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ்

இடை நிறுத்தப்பட்டுள்ள இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா நம்பிக்கையுடன் இருப்பதாக அதன் பிரதி இராஜங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் குழு மோதல் மூன்றுதினங்களில் 11 பேர் காயம்!

(வடமராட்சி)

யாழ். கரவெட்டி இராச கிராமம் பகுதியில் மூன்று தினங்கள் தொடர்ந்துஇடம்பெற்று வரும் கோஷ்டி மோதலில் பதினொரு பேர் காயமடைந்துள்ளார்கள் இவர்கள் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தாண்டு தினமான கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு இடம்பெற்ற விளையாட்டுப்போட்டியில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இக்கோஷ்டி மோதல் இடம்பெற்றுவருவதாக தெரியவருகின்றது.

இக்கோஷ்டி மோதலில் காயமடைந்த சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை

(8ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னை பூபதி நினைவு இறுதி நாட்களை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு



தியாகிஅன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு எழுச்சி நாட்களுள் இறுதி மூன்று நாட்களும் தமிழர் தாயகப்பகுதியெங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி இன்றும் நாளையும் நாளைமறுதினமும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப்புலிகளின் நிர்வாகச் செயலகங்கள் காவல் பணிமனைகள் உட்பட குறிக்கப்பட்ட இடங்களில் காலை 9.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றப்பட்டு பிற்பகல் 4.00 மணிவரையும் அடையாள உண்ணாவிரதம் இடம்பெறும். இறுதிநாளான 19 ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு தியாகி அன்னை பூபதியின் தியாகத்தை சித்திரிக்கும் வகையில் மாவட்ட ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களில் சிறப்புரைகள் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும். இதேவேளை இறுதிநாளான 19 ஆம் திகதி நாட்டுப்பற்றாளர் தினமாகவும் கடைப்பிடிக் கப்படவுள்ளது எனவும் தமிழீழ மாவீரர் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வு வவுனியா மாவட்டத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டினுள் புகுந்த கும்பல் ஓட்டோவை அடித்து நொருக்கியது

### -துன்னாலையில் சம்பவம்

துன்னாலை கிரான் பகுதியில் வீடொன்றினுள் புகுந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஓட்டோ வாகனமொன்று சேதமாக்கப் பட்டுள்ளது.

நவரத்தினம் யுவசீலன் என்பவரது வீட்டினுள் புகுந்த இளைஞர் கும்பலொன்றே ஓட்டோ வாகனத்தை அடித்துநொருக்கிசேதமாக்கியுள் ளது.

விபத்தொன்றில் யுவதியொருவர் காயமடைந்ததன் தொடர்ச்சியாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரியவருகிறது. (27)

### திருத்தம்

10.04.2004 அன்று மட்டக் களப்பு மாவட்டம் கதிரவெளிப் பகுதியில் துரோகி கருணா குழுவினருடனான மோதலில் வீரச் சாவடைந்த போராளி லெப். இராமரதன் என்பவருடைய பெயர் லெப்.இராமநாதன் என நேற்று முன்தினம் ஈழநாதம் தினசரியில் தவறுதலாக இடம்பெற் றுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

## வரிவிளம்பரம்

### தவறவிடப்பட்டது

பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவரது தேசியஅடையாள அட்டை இலக்கம் 543473391V 07.04.2004 அன்று கிளிநொச்சியில் தவறவிடப்பட்டுவிட்டதுகண்டெடுத்தோர் ஈழநாதம் பணிமனையில் சமர்ப்பிக்கவும் தகவல் பொ.தெய்வேந்திரம்.
(4445)

### முல்லை மாணவர்மன்றம் சிவநகர்புதுக்குடியிருப்பு

2006 A\ L வர்த்தக பிரிவுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2004.04.17 மாலை 3.00மணி கணக்கீடு:திரு.ஜெ.செல்வன், வணிகக் கல்வி: திரு.ந. ஜெயசுதன் 2005A\L வகுப்புக்களும் நடை பெறுகின்றது.- நிர்வாகி.
(4078)

## பூந்தோட்ட பராமரிப்பாளர் தேவை

பூந்தோட்ட பராமரிப்பாளர் யுனிசெவ் (UNICEF) நிறுவனத்திற்கு வேண்டப்படுகிறார்.

தகைமை:-பூந்தோட்ட பராமரிப்பில் நான்கு வருட அனுபவம்.

கிளிநொச்சியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமையுடையோர் 19.04.2004 திங்கட்கிழமைக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை யுனிசெவ், (UNICEF) இல.03, குமாரசாமி வீதி,கணேசபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

யுனிசெவ் [UNICEF] ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்,
இல.03,
குமாரசாமி வீதி,
கணேசபுரம், கிளிநொச்சி.
(சி-9450)

## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளோடு

தாயின் மடியில் 12 - 07 - 1972



தாயக மண்ணில் 17 - 04 - 1999

### மேஜர் சேந்தன் /றெஜினோல்ட்

**அகஸ்ரீன் ஞானமணி- சுரேஸ் செல்வன்**

(காங்கேசன்துறை-யாழ்.)

எங்கள் குடும்பங்களின் குலவிளக்கே
தாய்க்குத் தலைமகனே - சேந்தா
தாய்நாட்டுப் பற்றால் - உன்னரிய
உயிரை ஆகுதியாக்கியவனே
ஆண்டு பல ஆகினாலும்
உன்பரிவும்பாசமும்
எம்மனதைவிட்டு மாறுமோ
பாசமுடன் நாம் உன்படமதனை
நோக்கும்போது பூவாகச் சிரிக்கின்றாய்
பூப்போட்டு பூசிக்கவைத்திவிட்டாய்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் கவிபாலன், கப்டன் மறைச்செல்வன் ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

தகவல்:-
சித்தப்பா குடும்பத்தினர்,
(எ. றெக்ஷின்)

(சி-7186)


## GOVERNMENT OF SRILANKA
## NORTH EAST PROVINCIAL COUNCIL
## NORTH EAST EMERGENCY RECON STRUCTION PROGRAM
### CREDIT NO: 2880-CE
### NATIONAL COMPETITIVE BUILDING (CIVIL WORKS)

Invitation for Bids (IFB)

IFB No: MU/NEERP/01 Date: 15.04.2004

1. The GOVERNMENT of Sri Lanka has received a credit from the International DeveloPment Association towards the cost of **North East Emergency Reconstruction Programme** and intends to apply part of the funds to cover eligible payments under the Contracts as detailed in table below. Bidding is open to all bidders from eligible source countries as defined in the Guide Line: procurement under **IBRD** loans and **IDA** credits.

2. **The District Secretary, Mullaitivu, Sri Lanka** invites sealed bids from eligible bidders for the works as detailed in table below. Bidders may submit bids for any or all of the works.

3. Bidding documents (in two copies) of respective packages of works may be purchased till **15.00 hrs on 17.05.2004** from the **Chief Engineer, Departments of Buildings,Kilinochchi** at the address given below for a non refundable fee as indicated in the table below for each set either in Cash or Demand Draft from any scheduled Bank payable at Mullaitivu and in favour of **District Secretary, Mullaitivu, Sri Lanka.**

4. Interested bidders may inspect the Bidding document free of charge prior to collection if desired and obtain further information from the Address as under

**Chief Engineer,**
**Departments of Buildings,**
**Kilinochchi**

5. Bids shall be valid for a period of 90 days from date of bid opening and must be accompanied by Security amount as mentioned in table below drawn in favour of **District Secretary,Mullaitivu, Sri Lanka** and shall be delivered to

**chairman,**
**Tender Board**
**Office of the District Secretary**
**Kachcheri,**
**Mullaitivu**

**On or before** 15.00 hrs of 18.05.2004, at which time they will be opened in the presence of the bidders or representatives who wish to attend. If the Office happens to be closed on the date of recipt of the bids as specified, the bids will be received and opened on the next working day at the same time and venue.

6. Other details can be seen in the bidding documents.

**TABLE**

| IFB No | Name of work | Bid Security (Rs) | Cost of Bidding Document (Rs) | Period of Completion |
|---|---|---|---|---|
| MU/NEERP/HW/2 | Reconstruction of Central Dispensary, Alampil | 122,500/= | 1000/= | 04 Months |

7. Bidders are advised to note the minimum qualification criteria specified in Clause 4 of the Instructions to Bidders and as appearing in the Bidding Data to Qualify for the award of the individual contract for award of more than one contract under this IFB, the bidder must demonstrate having experience and resources sufficient to meet the aggregate of the qualifying criteria for the individual contracts.

**(Mrs.Marie Ann Emelda Sukumar)**
**District Secretary/ Govt. Agent**
**Mullaitivu District.**

(சி.7185)


## கணினி மையம்





### THE COMPUTER CENTRE

யாழ்சாலை, கிளிநொச்சி.

**கணினி மையம் தனது முதலாம் ஆண்டு சேவையை பூர்த்தி செய்வதை முன்னிட்டு சிறப்பு விலைக் கழிவில் பொருட்களை வழங்குகின்றது இச்சேவை 17.04.2004 - 30.04.2004 வரைக்குமே.**

**விரைந்து சேவையை பெற்றிடுவீர்கள். அத்துடன் புதிய முறையிலான தகவல் தொழில்நுட்ப உலகில் உங்களை அழைத்து செல்ல தகவல் இணையத்தளம் Net Café ஐ ஆரம்பித்துள்ளது.**

(சி.9375)



.வடக்கு பங்களாதேசில் நேற்று முன்தினம் வீசிய சூறாவளி யினால் குடியிருப்புகளை இழந்த மக்கள்.

# ஈராக் பற்றிய புஷ்ஷின் அறிக்கை குறித்து அமெரிக்க தேசியப்பத்திரிகைகள் கடும்விமர்சனம்

(வாஷிங்டன்)

**ஈராக்குறித்த கொள்கையில் பின்வாங்குவதில்லை எனவும் ஈராக்கை ஒடுக்குவோம் எனவும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எச்சரிக்கைவிடுத்துள்ளார். இதனை அமெரிக்காவின் தேசியப் பத்திரிகைகள் அனைத்தும் கடுமையாக விமர்சித்துள்ளன.**

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படையினருக்கு எதிராக எழுந்துள்ள பாரிய எதிர்ப்பும் அமெரிக்கப் படையினரின் மரண அதிகரிப்பும் ஒருபின்னடைவு என்பதை ஒப்புக்கொள்ளாமல் ஒற்றைப் படைத்தன்மையில் தாம் வெற்றிகொள்வோம் என புஷ் தெரிவித்துள்ளமையானது பொருத்தமற்றது எனவும் அப்பத்திரிகைகள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஈராக்கில் சனநாயகத்தைக் கொண்டுவருவோம் என சனாதிபதி ஜோர்ஜ்புஷ் குறிப்பிடுகின்றார். ஆனால் எப்படி அதனைக் கொண்டு வரப் போகிறார் என்பதற்கான மாற்றுத் திட்டம் ஒன்றும் அவரிடம் இல்லை எனவும் அப்பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

# அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு கொபி அனான் கண்டனம்

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின்போது பலஸ்தீன பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட அரபு மக்கள் மீண்டும் அங்கு திரும்பி வருவதை அனுமதிக்க முடியாது எனும் இஸ்ரேலின் நிலைப்பாட்டை அமெரிக்கா அங்கீகரித்திருப்பது குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானப் பேச்சுவார்த்தைகள் இதுவரை முற்றுப் பெறாதுள்ள நிலையில்,அமெரிக்கா இவ்வாறு அறிவித்திருப்பது பிழையான தொரு செயலாகும் என்றும் கொபி அனான் கூறியுள்ளார்.

பலஸ்தீனப்பிரச்சினை தொடர்பாக பாதுகாப்புச்சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளல் வேண்டும். இப்பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்படும் முடிவுகளின் பரயே தீர்மானங்கள் அமைத்தல் வேண்டும்.

இவ்வாறிருக்க இதற்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வாறு செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேநேரம் ஜோர்ஜ் புஷ்ஷின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பலஸ்தீனத் தலைவர்கள்பெரிதும் கொதிப்படைந்துள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.


# சுரங்கத் தொழிலாளர் பதின்நான்கு பேர் கொலை

## பிரேசிலில் சம்பவம்

பொலிவியாவில் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சுரங்கமொன்றில் 14 தொழிலாளர்களது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனை அந்நாட்டுப் பொலிசார் கூறியுள்ளனர். பொலிவியாவின் எல்லைப்பகுதியில் ரொன்டோனியாவிற்கு வடமேற்காக அமைந்துள்ள(அமேசன் பகுதியில்) பிரேசிலின் பகுதி வைரச் சுரங்கமொன்றிலேயே இச் சம்பவம் நடந்துள்ளது.

வைரச் சுரங்கத்தில் களவாக நடவடிக்கை மேற்கொண்டிருந்தபோது சிண்டாலார்கா எனப்படும் உள்ளூர் பழங்குடியினர்களுடன் ஏற்பட்ட சண்டை காரணமாகவே தொழிலாளர்கள் கொல்லப்பட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.வைரம்தோண்டுவது இப்பகுதியில் தடைசெய்யப்பட்டுள்ளது. களவாக இத்தொழிலில் ஈடுபடுவோரின் தொகை அதிகமாகும். இதனால் இவ்வாறான கொலைகள் இப்பிரதேசத்தில் இடம்பெறுவதும் சாதாரணமாகி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



ஷியா முஸ்லிம்களின் புனித நகரான பலூஜாவில் ஈராக்கிய தீவிரவாதிகளுடனான தாக்குதலுக்கு ஆயத்தமான நிலையிலுள்ள அமெரிக்கப்படையினர்.

# ஈராக்கில் பணயக்கைதிகளான மூன்று யப்பானியரும் விடுதலை

(பாக்தாத்)

ஈராக்தீவிரவாதிகளால் கைதுசெய்யப்பட்டு பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்த மூன்று ஜப்பானியர்களும் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

சென்றவாரம் ஈராக்தீவிர வாதிகளால் கைதுசெய்யப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஜப்பான் நாட்டைச்சேர்ந்தவர்களான இரண்டு ஆண்களும், ஒருபெண்ணுமே பாக்தாக்கில் உள்ள முஸ்லிம் அமைப்பு ஒன்றின் மூலம் ஜப்பானிய தூதரகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள நான்கு இத்தாலியர்களுள் ஒருவர் கொல்லப் பட்டுள்ள போதிலும் ஈராக்கில் உள்ள இத்தாலிய வீரர்கள் வாபஸ் பெறமாட்டார்கள் என இத்தாலி அறிவித்துள்ளது.

அல்ஜஸீரா தொலைக்காட்சி தனது ஒளிபரப்பின் போது ஈராக்கில் உள்ள மூவாயிரம் இத்தாலிய படையினர் வாபஸ் பெறவிட்டால் எஞ்சி உள்ள இத்தாலியர்களும் கொல் லப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# கருணாநிதி கேள்வி

(சென்னை)

மனச்சாட்சிக்குப் பதில் சொல்லும் துணிவு ஜெயலலிதாவுக்கு இருக்கிறதா என கலைஞர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெயலலிதா வாங்கிய நிலத்தை திருப்பித்தர வேண்டும் என நீதிமன்றம் கூறியுள்ளது.



அமெரிக்கப்படையினரால் தாக்குதலுக்குள்ளான பலூஜா நகரிலுள்ள தனது இடிந்த வீட்டின் முன்னாலிருந்து கதறித் துடிக்கும் ஈராக்கிய வாசி.

# தென்னாபிரிக்க பாராளுமன்றத் தேர்தல் ஆ.தே.காங்கிரஸ் அமோக வெற்றி

தென்னாபிரிக்காவின் பாராளுமன்றத் தேர்தலில் தற்போது ஆட்சியில் உள்ள ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் கட்சி அமோகவெற்றியீட்டியுள்ளது.

இந்தத்தேர்தலின் போது 17 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளில் நான்கில் மூன்றுபங்கு வாக்குகள் எண்ணப்பட்டநிலையில் ஆளும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் 69.8 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

இந்தச்சதவீதமானது 80 இலட்சம் வாக்குகளிலும் பார்க்கக்கூடுதலானது என அறிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை இந்தத்தேர்தல் தொடர்பாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; எஞ்சியுள்ள தேர்தல் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டதும் ஆபிரிக்க தேசியக்காங்கிரஸிற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமெனதெரிவிக்கப் பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க சனாதிபதி என்யேகே இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:-

தேசியகாங்கிரஸ் பத்துவருடகாலம் தென்னாபிரிக் காவை நிருவகித்து வந்துள்ளது எனவும் எயிட்ஸ்நோய், வேலைவாய்ப்பின்மை, குற்றச்செயல்கள் அதிகரிப்பு, என்பனவற்றிற்கு தீர்வு காணவென அரசாங்கத்திற்கு தென்னாபிரிக்க மக்கள் உரிய ஆணையை வழங்கி உள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் யாப்பை திருத்துவதற்கான மூன்றில் இரண்டுபெரும்பான்மையை தேசியக்காங்கிரஸ் பெறும் எனவும் அவர் நம்பிக்கை விடுத்துள்ளார்.

இன்டாட்டா சுதந்திரக்கட்சி இரண்டாம் இடத்தையும், சனநாயக கூட்டணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.



சுட்டுக் கொல்லப்பட்ட ஈராக்கிலுள்ள ஈரானிய தூதரக அதிகாரியான கலீஸ் நைமியின் கொலை தொடர்பாக விசாரிக்கும் ஈராக்கிய பொலிசார்.

- இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட-

# 181 மக்களவைத் தொகுதிகளுக்கு வேட்பு மனுத்தாக்கல் நேற்று ஆரம்பம்

இந்திய பாராளுமன்ற தேர்தலில் தமிழகம் மற்றும் புதுவை உட்பட 16 மாநிலங்களைச் சேர்ந்த 181 மக்களவைத்தொகுதிகளிற்கு நேற்று வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பமாகியுள்ளது. 5வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுகளை எதிர்நோக்கியுள்ள இந்த தொகுதிகளில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் கடைசி நாள் எதிர்வரும் 23ம் திகதியாகும்.

மக்களவைத் தேர்தலின் 4ம் கட்ட வாக்குப் பதிவுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியுடன் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து 5ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 181 மக்களவைத்தொகுதிகளிலும் வேட்புமனுத்தாக்கல் தொடங்கியுள்ளது. மே 10திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள இந்த 181 தொகுதிகளில் தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள 40 மக்களவைத் தொகுதிகளும் அடங்கும் இவைதவிர மேற்குவங்காளத்தில் 42, கேரளாவில் 20, உத்திரபிரதேசத்தில் 18, மத்தியபிரதேசத்தில் 17, பஞ்சாபில்13, ஹரியானாவில்10, டெல்லியில் 07,என 16 மாநிலங்களைச் சேர்ந்த இதரதொகுதிகளிலும் நேற்று முதல் வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள ஜிக்கிமாநிலத்திலும் நேற்று வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பமாகியுள்ளது.

"மே" 10திகதி நடைபெறவுள்ள இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்குப் பிறகு மே 13ம் திகதி 543 தொகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.


# உலக சாதனைகள்-4



1. 3000 நட்டுவக்காலிகளுடன் 32 நாட்கள் ஒரு அறையில் வசித்துள்ளார்.



2.சீனநாட்டவரானஇவர்2000 குண்டூசிகளை தனது தலை,நெற்றி பூராவும் குற்றியுள்ளார்.



3. அமெரிக்க நாட்டுப்பெண்மணியான இவர் 1093 தோடு வகைகளை தனதுமுகம் பூராவும்குற்றியுள்ளார்.




4. 8 பாம்புகளை 12.5செக்கன்களில் தனது வாய்க்குள் செலுத்தியுள்ளார்.

# 300 கிலோ மனிதர்



ஜேர்மனியில் அதிநிறை கூடிய மனிதராகக் கருதப்படும் மனிதரையே இப்படத்தில் காண்கிறீர்கள். இந்த மனிதரைப்பற்றிய சிறு குறிப்பை இங்கே காண்போம்.......

1. இவரின் பெயர்-பீற்றர்.கிறைன்ஸ்கி
2. வயது- 39
3. உடல் அகலம்- 50சென்ரி மீற்றர்
4. உடல்நிறை - 300 கிலோ கிராம்
5. இவர் தூங்குவது,-இரும்புக்கட்டில்; உட்கார்ந்து இருப்பது-இரும்புக்கதிரை
6. எந்த வாகனமும் செலுத்துவது இல்லை. ஏனெனில் அவர் அந்த வாகனத்தில் ஏறி அமரமுடியாது.
7. அரச பண உதவியில் வாழ்க்கைச் செலவை செய்து வருகிறார்.
8. கணனி, மின்அஞ்சல் போன்ற வி டயங்களில் தனது வாழ் நாளை கழித்து வருகிறார்.
9. உலகில் இவரும் ஒரு அபூர்வமனிதராக கருதப்படுகிறார்.

ஒரு மனிதர் ஒரு நாளுக்கு உண்ணும் உணவில் சுமார் 1000-1500 வரையிலான கலோரி சேர்ந்தால் நன்று என்று கூறப்படுகின்றது. ஆனால் இவர் 12,500 கலோரி உணவை உண்ணுகிறார். இவர் ஒருநாளில் உண்ணும் உணவின் கலோரியைப் பார்ப்போம்.........

| நேரம் | உணவுவகை | கலோரியின்அளவு |
|---|---|---|
| 9.00 | பாண்+இறைச்சிவகைச் சாப்பாடு | 560 |
| | பழரசம் | 490 |
| 11.00 | கோப்பி பானம் | 50 |
| | கொக்கோ பானம் | 200 |
| 13.00 | நூடில்ஸ் | 600 |
| | இறைச்சி வகை | 400 |
| 15.00 | கோப்பி | 50 |
| | கேக்வகை | 600 |
| 19.00 | பாண்+ வெண்ணெய்கட்டிவகை | 2600 |
| | பிஸ்கட் வகை | 228 |
| | பொரித்த உருளைக்கிழங்கு | 306 |
| | கோலாப்பானம் | 200 |
| 24.00 | பொரிவகைச் சிற்றுண்டி | 1700 |
| | சொக்லட்வகை | 530 |
| | ஒருநாளுக்கான குடிவகை | |
| | 5லீற்றர் கோலா | 2150 |
| | பியர் குடிவகை | 1500 |

# தெரிந்து கொள்ள

*ஒருவிநாடிக்குள் 48 கி.மீற்றர் வேகத்தில் சூரியனைச் சுற்றிவரும் கோள் புதன் ஆகும்.

*ஐரோப்பாவில் தொலைக் காட்சிக்கு முன்னே இருந்து அதிகளவிலான பொழுதைக கழிப்பவர்கள் போர்த்துக்கீசர் தான் அந்நாட்டில் 88 வீத மானவர்கள் தமது பொழுதை இப்படித்தான் கழிக்கின்றார் கள்.

* தகரம்(Tin) என்ற உலோகத்தில் 97%க்கு மேல்அ஼்கு தான் கலந்துள்ளது. தகரடப்பாக்கள் உண்மையில் இரும்பு எ஼்கு டப்பாக்களே.

* உலகில் அதிக சனத் தொகை கொண்டசீனாவில் "உலக மக்கள் தொகை நாள்" அண்மையில் கொண்டாடப் பட்டுள்ளது.

* சீனா, இந்தியாவை யடுத்து உலகில் மக்கள் தொகை அதிகமுள்ள நாடு அமெரிக்காதான்.

# செவ்வாயில் உயிரினங்கள் இருந்தனவா?

அமெரிக்க விண்வெளி நிலயமான நாசா நிறுவனம் மிக அண்மையில் நடத்திய ஆய்வுகள் மூலம் செவ்வாய்க்கிரகத்தின் மேற்பரப்பில் பலகாலத்துக்கு முன்பு திரவ நீர் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாக அறியவருகின்றது. அந்நிறுவனம் அண்மையில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிய "மார்ஸ் எக்ஸ்ப்பரஸ்" "ஒப்பச்சுனிட்டி" ஆய்வு கலங்கள் அனுப்பிய தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன. அத்துடன் உயிரினங்கள் இருந்திருப்பதாகவும் தற்போதும் அங்கு உயிரினங்கள் வாழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளது. அங்கு பெறப்பட்ட புகைப்படத்தினை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் செவ்வாயின் மேற்பரப்பில் வெகுகாலத்துக்கு முன்பு ஆழமற்றகடற்பகுதி இருப்பதற்கான தடயங்களும் நீர்ப்பாங்கான தன்மை காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளன. இவற்றின் மூலமாக அங்கு உயிரினங்கள் இருந்தமைக்கான சான்றுகளும் காணப்படுவதாக நம்மப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கோனல் பல்கலைக்கழக விஞ்ஞானியான ஸ்கியுவஸ் இதுவரை கிடைத்த தகவல்களை விட தற்போது பெறப்பட்டிருக்கும் தகவல்கள் செவ்வாய்க்கிரகத்தில் நீர் இருக்கிறது என்பதற்கான நல்ல சான்று எனக்கூறியுள்ளார்.

கடந்த சனவரி 25ந் திகதி செவ்வாய்க் கிரகத்தில் தரையிரங்கிய "ஒப்பச்சுனிட்டி" ஆய்வுகலமும் அதற்கு முன்பு அனுப்பப்பட்ட "ஸ்பிரிட்" கலமும் இணைந்து சேகரித்த தகவல்களின் (ஆய்வுகள்) படி அவை திடுக்கிடும் செய்திகளை அனுப்பிவைத்துள்ளன. அதனால் 90 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அவற்றின் பயணம் மேலும் நீடிக்கப்பட்டது.

ஒப்பச்சுனிட்டி செய்த ஆய்வுகளின்படி புவியின் கடற்கரை மேற்பரப்பையொத்த மேற்பரப்பு ஒன்று அங்கு இனங்காணப்பட்டுள்ளது என்பது பேராசிரியர் டேவிட்ருபின் என்பவரது கருத்தாகும். அதன்படி அப்பகுதி நீண்டகாலமாக நீரால் மூடப்பட்டிருந்திருக்கிறது. என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டில் மேலும் ஒரு ஆய்வுக்கலம் அனுப்ப உத்தேசிக்கப் பட்டுள்ளதால் மேலும் பல விரிவான,உறுதியான தகவல்களைப் பெறலாம் என்பது நிச்சயம்.

செவ்வாய்க்கிரகத்தில் நீர் இருப்பதாக கிடைத்த தகவல்களோடு அங்கு உயிரினம் இருந்தற்கான தகவல்வெளிவந்துள்ளதுடன் அங்கு உயிரினம் இருந்தனவா? இப்போதும் இருக்கின்றனவா? என்பது பற்றிய கேள்விகளும் எழுப்பப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்போரும் உள்ளனர். அவர்களின் கருத்தாவது நமது புவியில் உயிரினங்கள் தோன்றுவதற்கு முன்பு செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதாகவும், அங்கிருந்தே உயிரினங்கள் பூமிக்கு வந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

மேற்படி கருத்துக்கள் உண்மையானதாகவோ, கற்பனையானதாகவோ இருந்தாலும் வான மண்டலத்துக்கு (சந்திரனுக்கும், செவ்வாய்க்கும்) அடிக்கடி சென்றுவரும் சாத்தியம் பற்றியும் தற்போதுஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாராயினும் ஒருவர் கிழமைக்கு ஒருதடவை விண்ணுக்கு சென்றுவரக்கூடிய ஆய்வுக்கலம் ஒன்றைக் கண்டுபிடித்தால் அவருக்கு 10 மில்லியன் டொலர் பரிசாக வழங்கப்படும் என எக்ஸ்பிரைஸ் என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.


# செல்போன் பாவனை மூளை,தோலைப்பாதிக்கும்

அண்மைக்கால ஆராட்சிகளின்படி செல்போனிலிருந்து வெளிப்படும் மின்காந்த அலைகளினால் மனிதர்களுக்கு தோல் ஒவ்வாமை (Skin Alergy) ஏற்படுகின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் செல்போனில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சுக்கள் நமது மூளையிலுள்ள செல்களைப் பாதிக்கின்றது அதன் விளைவாக அல்சிமெர் (AlZehimers) நோய் ஏற்பட சாத்தியமாகின்றது என்று சுவீடன் நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

அதுமட்டுமன்றி 24 மணிநேரமும் செல்போனை பயன்படுத்துபவர்களின் மூளையிலுள்ள செல்கள் குறிப்பாக நினைவாற்றல் பகுதி, கற்றல்பகுதி என்பவற்றின்செல்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் அந்தஆய்வு மேலும் கூறியுள்ளது.

# ஆங்கிலம் கற்பிக்கும் "றோபோ"



கணனி வடிவில் ஒரு புதிய ரோபோ தென் கொரியாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தென் கொரிய மக்களுக்கு அதிகளவில் ஆங்கிலம் தெரியாது. இந்த ரோபோவை விரல்களால் தொட்டால் போதும் பேசத் தொடங்கிவிடும். ஆங்கிலத்தில் பேசக்கற்றுத்தரும். அத்துடன் இது வீட்டில் நடப்பவற்றைக் கண்காணித்துக் திரையில் காட்டும்.முன்பின் தெரியாதவர்கள் வீட்டினுள் நுழைந்து விட்டால் உடனே காட்டிக் கொடுத்துவிடும். இந்த கணனி வடிவ ரோபோவின் பெயர் "ஐரோபி" என்பதாகும். இதன் விலை 3400 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# அந்திப் பூச்சி



பூச்சி வகைகளில் வித்தியாசமான பூச்சி "அந்திப் பூச்சி" ஆகும். இதனை "விட்டில்பூச்சி"என்றும் அழைப்பவர்கள் உண்டு இந்தப் பூச்சிக்கு கண்கள் உண்டு. ஆனால் நல்ல பார்வைத் திறன் கிடையாது. இதன் தலையில் இரண்டு நுகர்வு உறுப்புக்கள் உள்ளன. இவைதான் இப்பூச்சிக்கு மூக்குப் போன்று நுகரும் ஆற்றலைக் கொடுக்கின்றன.

அதனைக் கொண்டு எதிரில் இருக்கும் உணவையும் தன் இணையையும் அந்திப்பூச்சி அறிந்து கொள்ளும் ஆற்றலுடையது.

பகலில் எதிரிகளுக்குப் பயந்து வெளியில் தலைகாட்டுவதில்லை. இரவில் உணவுக்காக வெளியே வருகின்றன.

### -குடாநாட்டில் படையினரால் கைதாகி

## காணாமல் போனோரின் விபரங்களை வெளியிட

## சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் நடவடிக்கை

(வடமராட்சி)

**1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை அறிக்கை ஒன்றினை வெளியிட சர்வதேச தொண்டரமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.**

குறிப்பாக 1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பாகவும் அதேபோன்று படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் குடாநாடு இருந்த காலப் பகுதியில் தமிழ்க்குழுக்களால் கைது செய்யப்பட்டு காணாமல் போன இளைஞர், யுவதிகளது நிலை தொடர்பாகவும் வெளிக்கொணரவே இவ்விசாரண அறிக்கையினை அவ்வமைப்புக்கள் வெளியிட முற்பட்டுள்ளன.

முக்கியமாக படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட காணாமல் போன அனைத்துத் தரப்புக்கள் தொடர்பாகவும் உண்மைகளை வெளிக்கொணரவும் அதேபோன்று அவர்களது தற்போதைய நிலை தொடர்பாக உரிய தரப்புக்கள் எவையும் மேலதிக தகவல்களை வழங்கவும் ஏதுவாகவே இவ்விசாரண அறிக்கை நூல் வடிவில் வெளிவரவுள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகமும் இப்பணிகளை முன்னெடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் அவர்கள் தரப்பிலிருந்து இச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. (27)

---

### மனைப் பொருளியல்

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான தமிழ் மொழி மூல செயலமர்வு

மனைப் பொருளியல் ஆசிரிய ஆலோசகர்களை அறிவுறுத்தும் தமிழ் மொழி மூலமான 2004 ஆம் ஆண்டுக்குரிய செயலமர்வு ஏப்ரல் 25,26 27 ஆம் திகதிகளில் வதிவிடப் பயிற்சியாக பண்ணைப்பிட்டியா சீதாவள நிலையத்தில் நடத்தப்படவிருப்பதாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ் மகாலிங்கம் அறிவித்திருக்கின்றார்.

ஆசிரிய ஆலோசகர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வலய மட்டத்தில் மனைப் பொருளியல் பாடம் படிப்பிக்கின்ற பாடசாலைகளும் வகுப்பு அடிப்படையில் கற்கின்ற மாணவர் எண்ணிக்கை (ஆண்/பெண்), ஒவ்வொரு வலயத்திலுமுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள உபகரண அட்டவணை, வலயங்களில் இப்பாடம் தொடர்பாக அமுல் நடத்தப்பட்ட விசேட செயற்றிட்ட அறிக்கை, இப்பாடத்தைக் கற்பிக்கும் போது எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பான ஓர் அறிக்கை ஆகிய விபரங்களைப் பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் எடுத்துச்செல்லுபடியும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (25)

---

## அடிப்படை வசதிகளின்றிஇயங்கும் யாழ்.ஊனமுற்றோர் பு.சங்கம்

யாழ். மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் போதியளவு அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கிவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் ஏற்படும் மிதிவெடிவிபத்துக்கள் ,ஏனைய விபத்துக்கள் போன்ற சம்பவங்களாலும் ஊனமாக்கப்படுவோரிற்குப் புனர் வாழ்வு வழங்கும் நோக்கத்துடன் மேற்படி சங்கம் இயங்கிவருகின்றது. எனினும் இது போதிய அளவு அடிப்படை வசதிகள் மற்றும் நிரந்தக் கட்டடமோ அற்ற நிலையிலேயே இயங்கிவருகிறது.

பல்வேறு விதமான விபத்துச் சம்பங்களிலும் ஊனமடைவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் யாழ்குடாநாட்டில் ஊனமடைவோருக்கு புனர்வாழ்வளிக்கும் விதமாக இயங்கி வரும் இச்சங்கம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தனது சேவையைப் பாதிக்கப்படுவோருக்கு வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. (33)

---

## அமைச்சுச் செயலாளர்கள் அடுத்தவாரத்தில் தெரிவாவர்

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களை தெரிவுசெய்யும் நிகழ்வு எதிர்வரும் வாரங்களில் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிறிசேரத்தும் உள்துறை அமைச்சின் செயலாளராக எம்.என். யுனைட் ஆகியோர் தொடர்ந்தும் பதவி வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இருவரில் எம்.என்.யுனைட் எந்தவொரு அரசுபதவிக்கு வருகின்றபோதும் உள்துறை அமைச்சின் செயலாளராக தொடர்ந்தும் நியமனம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், என்பனவற்றில் புதியவர்கள் நியமிக்கப் படவுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (32)

---

## அரசியல் யாப்பை திருத்தியமைக்கும் சனாதிபதியின் நடவடிக்கை குறித்து ரவூப் ஹக்கீம் சாடல்

(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பை திருத்தியமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக சிறிலங்கா சனாதிபதியால் நியமிக்கப்பட்ட அரசியல் யாப்பு குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளது.

அரசியல் யாப்பு மறுசீரமைக்கப்பட வேண்டிய முறைகள் அதன் அடிப்படை விடயங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இவை குறித்து விரிவாக ஆராயும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதாக குழுவின் உறுப்பினரான சனாதிபதி சட்டத்தரணி எம்.எஸ். சுபைர் தெரிவித்தார். இப்பணிகள் இன்றும் நடைபெறவுள்ளது.

இதேவேளை அரசியல் யாப்பு திருத்தங்களுக்கான நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் பாராளுமன்றத்தை அரசியல் யாப்பு நிர்ணய சபையாக மாற்றி அதன் மூலம் அரசியல் யாப்பை திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கை சட்டத்திற்கு முரணானது அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பாக தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

## தீவக மக்கள் மீது கடற்படையினர் கெடுபிடி ம.உ.ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டிப்பகுதியில் இடம் பெற்றுவரும் கடற்படையினரது சோதனைக் கெடுபிடிகள் தொடர்பாக தீவக பகுதிமக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தீவகப்பகுதிமக்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அண்மையில் அப்பகுதிக்கு சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட அதிகாரி றுவான்சந்திரசேகர தலைமையிலான அதிகாரிகள் தீவக மக்களுடனான சந்திப்புக்களை மேற்கொண்டனர். இச்சந்திப்புக்களின் போதே யாழ்ப்பாணத்தையும்-தீவகத்தையும் இணைக்கும் ஒரேயொருபாதையான பண்ணைப் பால மூடானபாதையில் அமைந்துள்ள அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் வைத்து தீவகத்துள்பிரவேசிப்போர் மீதும் தீவகத்தில் இருந்து வெளிச் செல்வோர் மீதும் பலவிதமான சோதனைக்கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தமக்குள்ள இயல்பாக நடமாடும் அடிப்படை உரிமையை மீறும் கடற்படையினரது செயல் எனச்சுட்டிக் காட்டியே தீவகபகுதி மக்கள் இவ்வாறான முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். (33)

---

## ஆங்கிலம் கற்கவிரும்பின் தொடர்பு கொள்ள கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய கிளி/அரச செயலகத்தால் அமுலாக்கப்படும் ஆங்கில மொழித்திறன் பயிற்சி நெறியினை பரவிப்பாஞ்சான் பகுதியில் உள்ள கிளி/மாவட்ட கூட்டுறவுச்சபை இம்மாதம் ஆரம்பிக்கவுள்ளது. இதில் பயில ஆர்வம் உள்ள க.பொ.த. சாதாரண சித்தி பெற்ற இளைஞர், யுவதிகள் கிளி. மாவட்ட கூட்டுறவுசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கிளி. மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் அகேதீஸ்வரன் வேண்டியுள்ளார். (சோ)

---

## பிறப்பு,இறப்பு பதிவுகள் இன்றும் நாளையும நடைபெறும்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்த மக்கள் மீண்டும் தாயகம் திரும்பி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மீளகுடியேறிய மக்கள் இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில் நிகழ்ந்த பிறப்பு,இறப்பு பதிவுகள் கண்டாவளை பிரதேச செயலர் பணிமனையில் 17.04.2004, 18.04.2004 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளதால் பொது மக்கள் தவறாது சமூகமளித்து பயன்பெறுமாறு பிரதேசெயலர் திரு.சீ.சிவசொருபநாதுபிள்ளை அறிவித்துள்ளார். (14)

---

## பொதுசன ஐ.மு. இன். 66 பா. உறுப்பினர்களில் 60 பேருக்கு அமைச்சர் அல்லது பிரதிஅமைச்சர் பதவி

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த 66 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 60பேருக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து பொதுசன ஐக்கிய முன்னணியினர் போட்டியிட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 35 பேர் அமைச்சர்களாகவும் 35 பேர் பிரதியமைச்சர்களாகவும் அங்கம் வகிக்கின்றனர்.

இம்முறை தேர்தலில்பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் மாவட்ட அடிப்படையில் 56 ஆசணங்களும், தேசியப்பட்டியலில் 10 உறுப்பினர்களுமாக 66 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சுப் பதவியில் 04 அமைச்சர்களும்,04 பிரதியமைச்சர்களுமே ஜே.வி.பிக்கு வழங்கப்பட்டுள்ளது.ஜே.வி.பி.யினர் தமது அமைச்சுப் பதவிகளை விரைவில் பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜே.வி.பி. சார்பில் மாவட்ட ரீதியில் 35 பேரும், தேசியப்பட்டியல் மூலம் மூவருமாக மொத்தம் 38 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

---

## சமாதான நடவடிக்கைக்கு அமைச்சை உருவாக்காதிருப்பது கவலை தருகிறது

### -பா.உ.ஜெயலத் ஜெயவர்த்தன

புதிய அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தும் அமைச்சொன்றை உருவாக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமென முன்னாள் புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சனாதிபதிக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார் தாம் முன்னர் நிர்வகித்த அமைச்சின் பொறுப்புக்களை யார் வழிநடத்துவது என்பதில் தெளிவற்ற தன்மை தோன்றியிருப்பதாகவும் அவரது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் போது மீள் குடியமர்வு புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகாரம் ஆகியன முக்கிய இடம் வகிக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## இயந்திரக் கோளாறால் வயலில் தரையிறங்கிய விமானம்

ஐக்கிய அரபு எமிரேட்டில் வசிக்கும் பிரித்தானியர் ஒருவரும் சிறிலங்கா விமான சேவை நிறுவனத்தைச் சேர்ந்த கப்டன் தர அதிகாரியும் பயணம் செய்த சிறியரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை இயந்திரக் கோளாறு காரணமாக அனுராதபுரம் சாலியபுர வயற்பகுதிக்ள் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் சிறகுப்பகுதியில் சிறிது தீப்பற்றியதாகவும் அதனால் ஒருவரும் காயமடையவில்லை எனவும் தெரிவக்கப்படுகிறது.மேற்படி விமானத்தில் பயணம் செய்த இருவரும் அனுராதபுரத்திலுள்ள பௌத்த வழிபாட்டுத் தலங்களை புகைப்படம் எடுக்கவந்தவர்கள் எனக்கூறப்படுகிறது. பழுதடைந்த விமானம் பின்னர் லொறி ஒன்றின் மூலம் கொழும்புக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

---

## வடகிழக்கில் வைத்தியர்கள்,தாதியர் ஆயிரத்தி நானூறு பேருக்கு வெற்றிடம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 9 சுகாதார பிரிவுகளிலும் வைத்திய நிபுணர்கள்.வைத்தியர்கள், தாதிகள் வெற்றிடங்கள் 1400 ற்கும் மேற்பட்டவை உள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

வடக்குகிழக்கு 132 வைத்திய நிபுணர்கள், 610 வைத்தியர்கள் 104 பல்வைத்தியர்கள் 56 சுகாதார வைத்திய அதிகாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் இங்கு 14 வைத்தய நிபுணர்கள் 363 வைத்தியர்கள், 39 பல்வைத்தியர்கள் 32 சுகாதார வைத்திய அதிகாரிகள் மட்டுமே கடமை புரிகின்றனர்

ஒன்பது மாவட்டங்களிலும் 954 தாதியர் வெற்றிடங்கள் உள்ளன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

### 'மே' தின நிகழ்வு

### பொ.ச.ஐ.மு

### தனித்து நடத்த முடிவு

"மே"தின ஊர்வலம்மற்றும் மே தின கொண்டாட்டங்களைப் பொதுசன ஐக்கிய முன்னணி தனித்து மேற்கொள் ளத்திட்டமிட்டுள்ளது. ஐ.ம.சு. முன்ன ணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த ஜே.வி.பியைமட்டும் விலத்தி மே தின நிகழ்வுகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

# தந்தை செல்வாவின் 27ஆவது சிரார்த்த தினம்

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரும் மறைந்த தமிழ்த் தலைவருமான தந்தை செல்வநாயகத்தின் 27வது ஆண்டு சிரார்த்த தினத்தை ஒட்டிய விசேட அரசியல் கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.யாழ். பல்கலைக்கழகத்தினரதும், தந்தை செல்வா அறங்காவல் குழுவினதும் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் எதிர்வரும் 26 ஆம் திகதி தென்னிந்திய திருச்சபையின் வணக்கத்திற்குரிய பேராயர் வணபிதா ஜெயநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில்,

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தமிழ்த் தேசியமும் தேர்தல் முடிவுகளும் என்ற தலைப்பிலான சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளது. (33)

# ஆலோசனைத் தீர்மானங்களை எடுக்க விசேட மாநாட்டுக்கு ஏற்பாடு

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆலோசித்துத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான விசேட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ். அரச செயலகத்தில் யாழ். அரசதிபர் செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இம்மாநாட்டில் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் அதன் விளைவாக ஏற்பட்ட அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களுக்கான அபிவிருத்திகள் மற்றும் புனர்வாழ்வுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்படும்.

இதில் அரச திணைக்களங்களின் அதிகாரிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், சர்வதேச மனிதாபிமான உதவிகள் வழங்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உலகவங்கி மற்றும் ஆசிய அபிவிருத்திவங்கி பிரதிநிதிகள் என பல உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

# சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.க. சார்பில் லொக்கு பண்டார?

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக முன்னாள் நீதி அமைச்சர் டபிள்யூ-ஜே.எம். லொக்கு பண்டார தெரிவாகும் சாத்தியம் அதிகமாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் சபாநாயகர் வேட்பாளருக்கு ஜாதிக ஹெல உறுமயவும்,தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஆதரவு வழங்கவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சார்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் சபாநாயகர் வேட்பாளருக்கு 119 வாக்குள்கள் கிடைக்கும் என்றும் ஐ.ம.சு.முன்னணியின் சபாநாயகர் வேட்பாளருக்கு 106 வாக்குள் கிடைக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

எதிர்வரும் 22 ஆம் திகதி 13வது நாடாளுமன்றம் முதன் முதல் கூடுகின்றது அன்றைய தினம் நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சபாநாயகர் தெரிவுக்கு டி.யூ.குணசேகரவின் பெயரும் ஏற்கனவே பரபரப்பாக பேசப்பட்டது. தெரியவருகிறது. டி.யூ.குணசேகர தேசியப்பட்டியல் எம்.பி.ஆவார்.

முன்னதாக சபாநாயகர் பதவி ரட்ண சிறி.விக்கிரமநாயக்கவுக்கு வழங்குவதாக எடுக்கப்பட்ட தீர்மான மும் நடைமுறைச்சிக்கல் காரணமாக நிறுத்தப்பட்டது .

இவரை தேசியப்பட்டியல் அங்கத்தவராக நியமிப்பதாயின் முன்னர் தேசியப்பட்டியல் எம்.பி. ஒருவர் பதவியேற்று இராஜினாமாச் செய்ய வேண்டும். பெரும்பாலானோர் டி.யு.குணசேகரவை சபாநாயகர் பதவிக்கு பொருத்தமானவர் என்று கூறுவதில் அவருக்கே வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# நாட்டில் அரசமைப்பவர்கள் சிங்களவர்களாகவே இருக்க வேண்டும்

## -ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

நாட்டில் அரசாங்கத்தை அமைப்பவர்கள் சிங்களவர்களாகவே இருக்க வேண்டும் மாற்று இனத்தவர்களுடன் இணைந்து அரசாங்கம் அமைக்கக் கூடாது. இவ்வாறு ஜாதிக ஹெலஉறுமய சனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தகவலை ஜாதிகஹெலஉறுமயவின் உயர்பீடத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வண.எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்துள்ளார். ஜாதிகஹெலஉறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டிதலதா மாளிகையில் வழிபாடுநடத்திய பின்னர் அங்குபேசியபோது தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

தலதா மாளிகைக்குள் எமது வருகை வழிபாடுகளுக்கானதே தவிர, உத்தியோகபூர்வமானதல்ல. எமது நாட்டில் அரசமைப்பவர்கள் சிங்களவர்களாகவே இருக்கவேண்டும். சிறுபான்மையினர் எவருடனும் சேர்ந்து அரசமைக்கக் கூடாதென்று சனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 105 ஆசனங்கள் கிடைத்துள்ளதால் அவர்கள் அரசாங்கம் அமைக்கலாம். எமது தர்மராச்சியப் பயணத்திற்கு மக்களின் ஆதரவு கிட்டியுள்ளது. எமது பயணம் தொடரும் எந்தவொரு கட்சியையும் சாந்திருக்காமல் மக்களின் நலனுக்காக அரசுமேற்கொள்ளும் செயற்பாடுகளில் ஒத்துழைப்போம் என்றும் தேரர் மேலும் கூறியுள்ளார்.


# உந்துருளிகள் இயலவிற்பனை

## (ஏலவிற்பனை)

இயங்கும் நிலை/உதிரிகளாக்கும் நிலை

பார்வையிடும் காலம் :- 15,16,17/04/2004.

இயலம் விடப்படும் காலம் :- 20/04/2004.

நேரம் :- காலை 10.00மணி

இடம் :- உடைமைப்பகுதிப் பணிமனை
வேணாவில்,
புதுக்குடியிருப்பு.

குறிப்பு:- கேள்விக்கான கட்டணம்-ரூபா-200/=

(சி-7183)


# ஐ.ம.சு.மு.வின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம்

## அனைவரையும் கலந்துகொள்ள சனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா தலைமையில் ஐ.ம.சு.மு. கூட்டணியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதியமைச்சர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று இன்று கண்டியில் நடைபெறுகின்றது.

முதலாவதாக தலதா மாளிகையில் வழிபாடு ஒன்றை நடத்தி மாலையில் அனைத்து அங்கத்தவர்களும் கலந்துகொள்ளும் கூட்டம் ஏற்பாடாகியுள்ளது.

கூட்டணி அரசு பதவியேற்ற பின்பு நடைபெறும் இவ்வாறான முதலாவது கூட்டம் இது என்பதால் அனைவரையும்தவறாது கலந்து கொள்ளுமாறு சந்திரிகா கோரியுள்ளார்.

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் 3000 கண்காணிப்பாளர் பணியில்

(கொழும்பு)

வடமேல் மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக மூவாயிரம் அவதானிகள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகச் பெப்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இடம்பெறக் கூடிய வன்செயல்கள் தொடர்பாக தாங்கள் கவனம் செலுத்தி வருவதாக அந்த அமைப்பின் தலைவர் கிங்ஸ்லிறொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.


இலங்கை அரசு
வடக்கு-கிழக்கு மாகாணசபை
வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இலக்கம் 2880 சி.இ.(C.E)
தேசியப் போட்டிக் கூறுவிலை கோரல்
நிர்மாண வேலைகள்

# மீள் கேள்வி அறிவித்தல்-ஐ.எவ்.பி(I.F.B)

ஐ.எவ்.பி.இல:முல்-நீர்ப்-01

01 வடக்கு –கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி, ஐ.டி.ஏ (IDA) நம்பிக்கையின் கீழான கடன் வசதி.

02 அரசாங்க அதிபர், முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03 கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது முல்லைத்தீவில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர்,முல்லைத்தீவு என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (D.R.A.F.T)சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம்,கிளிநொச்சி அவர்களிடம் இருந்து 17.05.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் பிரதிகளைப்பெற்றுக்கொள்ளலாம்.

04 ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பிரதம எந்திரி,மாகாண கட்டடங்கள் திணைக்களம்,கிளிநொச்சியில் இலவசமாகப்பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி
மாகாண கட்டடங்கள் திணைக்களம்.
05 கிளிநொச்சி.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகள்,கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர்,முல்லைத்தீவு என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைத்து பின்வரும் முகவரிக்கு 18.05.2004 பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்/கச்சேரி,
முல்லைத்தீவு.

அதே தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள்
06 பெறப்பட்டு திறக்கப்படும்.

வேறு விபரங்களைக் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல | வேலைவிபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| முல் /நீர்ப்/ சுவே/2 | மத்திய மருந்தகம் மீள் நிர்மாணம். அலம்பில் | 122,500/= | 1000/= | 04 மாதங்கள் |

07 கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாண குறிப்புக்கள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக்கேள்வி விளம்பரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

(திருமதி. மேரி ஆன் இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம் கச்சேரி
முல்லைத்தீவு.

(சி.7184)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வருகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17 -04-2004

## கீழிறங்கிவிட்ட அரசு!

"சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையில் இருந்து சிறிலங்கா அரசு தற்சமயம் கீழிறங்கி நிற்கின்றது. அத்தோடு, புதிய அரசாங்கத்தின் நிலைமையைக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் வாய்ப்பில்லை எனவும் கருத வேண்டியுள்ளது" என்ற ஹரி குணத்திலக்கவின் மதிப்பீடு யதார்த்த நிலை குறித்த சரியான கூற்றுக்களே.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகள் குறித்து நீதியான நிலைப்பாட்டுடன் இல்லை என்பது அவரின் முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்கள், நடவடிக்கைகள் என்பனவற்றில் இருந்தே புரிந்து கொள்ளத்தக்கது. சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழி சமைத்தவர் நானே எனக் கூறிக் கொண்டாலும், நோர்வேயை மத்தியஸ்தத்திற்கு அழைத்தவர் நானே எனக் கூறிக் கொண்டாலும் உண்மையில் சமாதானப் பேச்சுவார்த்தையில் சந்திரிகாவோ அன்றி பொ.ஐ. முன்னணியோ பெரும் பங்கெதுவும் ஆற்றவில்லை.

மாறாகச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகளிலேயே கவனத்தைச் செலுத்தினர். யுத்த நிறுத்த உடன்பாடு பற்றித் தொடர்ச்சியாக விமர்சனம் செய்து வந்த சனாதிபதி சந்திரிகா, ஒரு கட்டத்தில் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது எனக் கூறி பாதுகாப்பு அமைச்சு உட்பட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டத்தைச் சமர்ப்பித்தனர். இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தை உடனடியாகவே கலைக்க முன்வந்தார். சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு எதிரானதென்பதை நிராகரிப்பதென்பது இலகுவானதல்ல.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கலைத்ததன் மூலமே சமாதான முயற்சிகளில் இருந்து கீழ் இறங்கிவிட்டார் என்பது வெளிப்படையானது. ஆனால், அத்தோடு மட்டும் சனாதிபதி சந்திரிகா தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள முற்படவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அவர் தேர்தலில் கூட்டுச் சேர்ந்த கட்சிகள், தற்பொழுது அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காகப் பேரங்களில் ஈடுபடும் கட்சிகள் என்பனவற்றின் அரசியல் கோட்பாடுகளில் இருந்தே அவர் சமாதான முயற்சிகளில் இருந்து தொலைவிலேயே உள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலமே சமாதான முயற்சிகளில் கீழிறங்கத் தொடங்கிவிட்டார். அவர்கள் இடையில் ஒரு வருடம் வரையில் நடாத்திய பேச்சுவார்த்தை மூலம் உருவான புரிந்துணர்வு உடன்பாட்டில்கூட அவர்களினால் இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவைக் காண்பதில் இணக்கப்பாடான போக்கிற்கு வரமுடியவில்லை.

இதேவேளை, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று தனியாக இயங்கப்போவதாக அறிவித்த கருணாவின் விவகாரத்தை சனாதிபதி சந்திரிகா அணுகிய முறையானது நடு நிலையுடன் கூடியதாக இருக்கவில்லை. கருணாவிற்குச் சார்பான வகையிலேயே நடந்து கொண்டுள்ளார்.

அதிலும் குறிப்பாக, சிறிலங்கா இராணுவம் கருணாவிற்கு வெளிப்படையாக உதவிகளை வழங்கும் வகையில் நடந்துகொண்டது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக கருணா குழு முகம் கொடுக்கும் வகையில் அதனைத் தயார்ப்படுத்தவும், அதற்குப் பாதுகாப்பு அளிக்கவும் அது முன்வந்தது. சிறிலங்கா இராணுவமும், பாதுகாப்பு அமைச்சும் இதனை மறுத்தமையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை.

அத்தோடு, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கட்டுப்பாட்டிலிருந்த அரச ஊடகங்கள் செயற்பட்ட/செயற்படும் விதமானது புதிய அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒரு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத்தக்க வகையிலானதாக இருக்கவில்லை. விடுதலைப்புலிகளைச் சீண்டுவதாகவும், அவதூறு செய்வதாகவுமே இருந்தது. இவ் அமைச்சானது சனாதிபதி சந்திரிகாவின் அதி விசுவாசியும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், அரசியல் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரிடம் இருப்பதினால், சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் ஊடகங்கள் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டன என்பதே உண்மையாகும்.

இந்த வகையில், சமாதான முயற்சிகளுக்கு முரணான வகையிலான செயற்பாட்டின் மூலம் சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் கீழிறங்கிச் செல்கின்றது என்பது விடுதலைப்புலிகளுக்கும் தெரியாததொன்றல்ல. அத்தோடு, சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய போக்கு எதிர்காலச் சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிப்பதாக இருக்குமென்பதும் வெளிப்படையானது.

ஆயினும், விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் மௌனம் காக்கின்றனர் என்பதே உண்மையாகும். சந்திரிகா அரசாங்கம் கீழ் இறங்கிச் செல்கின்றது என்பது தெரிந்திருந்தும் விடுதலைப்புலிகள் இவ்வாறு நடந்து கொள்கின்றமைக்கு புலிகளின் பலவீனமோ, புலிகள் மீதான நெருக்குதல்களோ காரணம் என யாராவது நம்புவார்களேயானால், கருணாவை சிலர் நம்பி ஏமாந்தது போன்றதாகவே அது இருக்கும். விடுதலைப்புலிகள் சமாதானத் தீர்விற்காக தம்மால் இயன்றளவு காத்திருக்கின்றனர் என்பதே நிதர்சனமாகும்.



## தன்னை தீபட்ட மெழுகெனவே உருக வைத்த அன்னை

பூவுலகில் மொட்டவிழ்ந்த புனித மலர்
பாவகையால் தொடுத்து
பண்ணிசைக்க முடியாமல்
பாரதமே விழி திறக்க
ஊரை விட்டுயிர் துறந்தாள்.

வீரம் விளை நிலத்தில் பிறப்பெடுத்து
மண்ணை கோரப்பிடியிடையே பறித்தெடுக்க
தன்னை தீபட்டமெழுகெனவே உருகவைத்த
அன்னை தீரத்தை விண்ணவரும்
கண் சொரிந்து போற்றுகிறார்.

அகிம்சையால் வாழ்வுபெற்ற பாரதமே
இவள் கண்மூட காரணமாய் மாறியதால்
முதுகெலும்பு முற்றாக முறியமுன்னர்
முகமூடி அணிந்து கொண்டு படகேறி
முற்றாக போய்ச் சேர புறப்பட்டார்.

பொன்னான இந்த பூமிதனில்
அன்னை மண்ணோடு போகின்ற கோலமதை
என்னாலும் காண்பது துன்பமென்று
கண்ணால் சொரிந்த நீர் துளிகள்
ஆறாகி ஈழத்தில் நிறைந்ததுவே.

மானிடர் மட்டுமா உமைத்தொழுவார்
உம் வீரத்தால் பூத்திட்ட பூமிதனை
கண்ணாலே காண்கின்ற விண்ணவரும்
மண்ணுலகு வந்து கால் பதித்தால்
கைகூட்டி உமை தொழுது நீர் சொரிவார்.

சசிக்குமார்

## யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்தியதன் மூலம் அரசு பிரபாகரனுக்கு கருணாவைத் தோற்கடிக்க உதவியுள்ளது

### -ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர்

(கொழும்பு)

யுத்தநிறுத்தத்தை அமுல் செய்ததன் மூலம் கருணா அணியினை தோற்கடிக்க புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு புதிய அரசு உதவியுள்ளது. என ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது. இக்கட்சியின் பேச்சாளரான அத்துருலியா ரதனா தேரர் இதுகுறித்து தெரிவிக்கையில்

அரசு உதவியிருக்காவிடின் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது துருப்புக்களை அனுப்பி கருணா அணியினருக்கெதிராக எவ்வாறு தாக்குதல் நடத்தியிருக்கமுடியும் என்று கேள்வி எழுப்பியுள்ள அவர் இது புலிகளும் சந்திரிகா அரசும் எற்கனவே புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு வந்துள்ளதையே காட்டுகிறது. இது எம்மைஅசௌகரியத்திற்குள்ளாக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான புலிகளை தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் கிழக்கிற்குச் செல்ல அனுமதித்த தானது அரசு என்ற பொறுப்பை மீறிய செயலாகும்.

இந்தவகையில் பார்க்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான அணுகுமுறை குறித்து கொள்கையில் முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்குமிடையில் நாம் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை புதிய அரசாங்கம் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது.

மிலேனியம் சிற்றிவிவகாரத்தை பரபரப்பாக்கிய சந்திரிகா அரசின் இரட்டைவேடத்தை எம்மால் புரிந்து கொள்ளமுடியாதுள்ளது எது எப்படி இருப்பினும் தற்போதைய சூழலை நாம் மிகவும் அக்கறையுடன் நோக்குகின்றோம். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.கட்சியை முழுமையாக மீளமைத்தாலே அதன் எதிர்காலத்தைத் தக்கவைக்க முடியும்

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ

ஐக்கிய தேசியக்கட்சியை முழுமையாக மீளமைப்பதன் மூலமே அதன் எதிர்காலத்தை தக்கவைக்க முடியும் என சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கள்வர்களும், காடையர்களும், கொள்ளையர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தீர்மானங்களில் பங்கு கொண்டதன் விளைவாகவே இம்முறை தோல்வி அடைந்தது எனத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில் இம்முறை தோல வியைத்தழுவிய முஸ்லிம் காங்கிரஸ் சிறந்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி[illegible]ங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி[illegible] அவர் அவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து தனக்கு தேசியப்பட்டியலில் இட ஒதுக்கீடு செய்திருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பற்றி கருத்துத் தெரிவித்த டிரோன்பெர்னாண்டோ மற்றவர்களின் கருத்துக்களை ஏற்காது தன்னுடைய இஷ்டப்படியும் தவறானவர்களின் வழிநடத்தலிலும் செயற்பட்டமையும் கட்சியின் தோல்விக்கு முழுக்காரணம் என்றும் இதில் . ரணில் பாடங்களைக் கற்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் இதேவேளை முன்னாள் வெளியுறவு அமைச்சரான டிரோன் பெர்னாண்டோ கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவிக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாக்-இந்தியா 3வது டெஸ்ட்

## இந்தியாவுக்கு வெற்றி தொடரையும் கைப்பற்றியது

பாகிஸ்தான் ராவல்பிண்டியில் கடந்த 13ம் திகதி ஆரம்பமான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் இந்திய அணிமகத்தான வெற்றிபெற்று டெஸ்ட் தொடரைக்கைப்பற்றி விட்டது.


இதற்கு முன்பு நடைபெற்ற ஒருநாள் தொடரையும் 3-2 என்றவித்தியாசத்தில் கைப்பற்றிய இந்திய அணி டெஸ்ட் தொடரை 2-1 என்ற அடிப் படையில் வென்று தமது நாட்டுக்கு வரலாற்றுச்சிறப்பை வழங்கியுள்ளது.

கடைசி டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் அனைத்துவிக் கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைமட்டுமே பெற்றது. பதிலுக்கு தனது முதல் இனிங்சை ஆடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்ப வீரரான சேவாக்கை முதல்பந்தி லேயே இழந்தது. அதே போல் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் 1ஓட்டத்துடன் ஆட்டமிழக்க இந்திய அணிநெருக்கடிக்கு உள்ளாகியது.



எனினும் அணியில் உபதலைவர் ராகுல் ராவிட் அற்புதமாக ஆடி இரு சதங்களை (270) பெற்று ஆட்டமிழக்க தமது பங்கிற்த கங்குலி, லக்ஸ்மன், பட்டேல், யுவராச்சிங் ஆகியோரும் தமது பங்கிற்கு முறையே 70,71,69,47, ஓட்டங்ளைப் பெற்று தனது அணியை 600 ஓட்டங்கள் என்ற வலுவான நிலைக்கு இட்டுச் சென்றனர். பின்னர் தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்தது.

நேற்றுக்காலை தொடர்ந்து விளையாடிய அவ்வணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களை மட்டுமே பெற்று 1 இனிங்சை 131 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.



# தமிழ் மக்களின் ஆணைக்கு அமைவாக சனாதிபதியின் நடவடிக்கை அமையவில்லை!

## தமிழ்க் கூட்டமைப்பு பா. உ. கள் சந்திப்பின் பின் சுரேஸ் பிரேமச் சந்திரன்

சனாதிபதியால் பேச்சுவார்த்தைக் கான ஆக்கபூர்வமானநடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய கூட் டமைப்பிற்கு ஓர் ஆணையை வழங்கி யுள்ளனர். அதாவது தமிழ் மக்களுக் கான ஓர் இடைக்கால தன்னாட்சி அதி கார சபையை உருவாக்குவதற்கான ஆணைவழங்கப்பட்டுள்ளது இதற் கமைய எந்த நடவடிக்கைகளும் சனாதிபதியால் மேற்கொள்ளப்பட வில்லை.

இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஸ் பிரேமச் சந் திரன் தெரிவித்தார்.

நேற்றைய தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப் பின் பின்னரே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்;

சனாதிபதியினால் முன்மொழி யப்பட்டுள்ள அரசியல்நிர்ணயசபை தொடர்பான விடயங்கள் சந்திப்பில் ஆராயப்பட்டது. ஆனால் இவை தொடர் பாக நாங்கள் கலந்துரையாடலை நடத்தியிருந்தாலும் எதிர்வரும் 20ஆம்திகதி தமிழீழ விடுதலைப்புலி களுடன் பேசியபின்னர். 22ஆம்திகதி பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக இறுதிமுடிவுஎடுப்பது என நேற்று தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை தமிழ் மக்களின் ஆணைக்கு மாறாக தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமிழ் மக் களின் நலன்களுடன் தொடர்புடைய அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட் டிருப்பதானது தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட அவமானம் என்பதை யும், நிதானமாக சமாதான முயற்சி கள் சம்பந்தமாக சனாதிபதியின் நம் பத்தகுந்த ஆக்கபூர்வமான முயற்சி கள் எதுவும் ஏற்படுத்தப்படுமா? என்ற சந்தேகத்தையும், கேள்வியையும் எழுப்பியுள்ளது சனாதிபதியின் இச் செயல் நல்லெண்ண நடவடிக்கை களுக்கு மாறாக நம்பிக்கையீனத்தை யும் ஏற்படுத்துகிறது. சமாதான முன் னெடுப்புகளில் சனாதிபதியின் இத் தகைய நடவடிக்கைகளையும், மேற் கூறப்பட்ட அமைச்சு நியமனத்தையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளு மன்றக்குழு மிகவன்மையாகக்கண்டிக் கின்றது என்ற தீர்மானம் நிறைவேற் றப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் குழுக்கூட்டம் நேற்று பகல் 11. 45 மணி முதல் ஒரு மணி வரை பாராளுமன்றக்கட்டடத் தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது.

### – தென்மராட்சி தெற்கில் மீளக்குடியேறுவோர் –

## புகைப்படங்களுடன் குடும்பவிபரம் சமர்ப்பிக்க வற்புறுத்தும் படையினர்

தென்மராட்சி தெற்கின் அதி உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் மீளக் குடியமரும் குடும்பங்கள் தமது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் உள்ளடக்கியதான குழுப் புகைப்படமொன்றை சமர்ப்பிக்கவேண்டு மென,படைத்தரப்பு அறிவித்துள்ளது அத்துடன் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்களையும் முழுமையாகத் தம்மிடம் சமர்ப்பிக்கவேண்டு மெனவும் அவர்கள் பணித்துள்ளதாக தெரியவருகின்றது. புகைப்படம் மற்றும் விபரங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதியைப்பெற்றிராத குடும்பங் களை தமது சொந்தஇடங்களுக்குச் செல்ல படைத்தரப்பு அனுமதி மறுத் துள்ளது.

இதேவேளை படைத்தரப்பால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கைதடி. நாவற்குழியின் வடக்குப்பகுதியில் சுமார் 30 வீடுகளும் அதேபோன்று அதையண்டிய மறவன்புலோ மேற்குக் கிராமத்தில் 12வீடுகளுமே மீளக் குடியமரக் கூடிய நிலையில் இருப்பதாக அப்பகுதி விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன. எஞ்சிய வீடுகளில் பெரும்பாலானவை யுத்த அனர்த்தங் களால் அழிந்துபோயுள்ளதால், அப்பகுதிகளில் தற்காலிககொட்டகைகளை அமைத்தே.இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியுமெனவும் அவ்வமைப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (27)

## இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகத்தினால் 2003 மாகாணசபையினால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் புதுக்குடியிருப்பு காரியாலயத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 11.00 மணிக்கு இளைஞர்கழகங்களுக்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதனைவந்து பெற்றுக்கொள்ளுமாறு இளைஞர்கழக நிர்வாகிகளை முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி கேட்டுக்கொள்கின்றார். (26)

### பேச்சுவார்த்தை..

பாக நோர்வே மற்றும் நாடுகளுடன் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ள ஆர்மிரேஜ், மே மாதம் 17ஆம் திகதி டோக்கியோ உதவி வழங்கும் ஆராய்வு மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை விடயத்தில் மேலதிக பங்களிப்பு வழங்குவது தொடர்பாக ஆராயவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கிறிஸ்பற்றன் ஐரோப்பிய யூனியனின் தற்போதைய தலைமைத்துவ நாடான அயர்லாந்தின் பிரதிநிதி, நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க அரசு ரணில் விக்கிரமசிங்கவுடனும் லக்ஷ்மன் கதிர்காமருடனும் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளதாக ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களில் சனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளதாகவும், ஏற்கனவே அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவலுக்கு இது பற்றி அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (32)

### மட்டு...

இவ்வரசு தமது இராணுவத்தினர் ஊடாக அவர்களின் சிவில் நிர்வாகஅமைப்பிற்கமைவாக அவர்களைப் பாதுகாத்திருக்கலாம் ஆனால் இந்த அநியாயங்கள் நடந்தவேளை அவர்கள் எவ்வித பாதுகாப்பையும் வழங்கவில்லை எனவே நான் அவர்களிடம் கூறியுள்ளேன் நஷ்டஈடு பெறுவதற்கான ஏற்பாட்டினை நாங்கள் எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக இக்கோரிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்து அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்து தருவதாகக் கூறியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சனாதிபதியின்..

மன்றத்தில் உங்கள் உத்திகள் என்னவாக இருக்கப்போகின்றது.

பதில்: வட-கிழக்கு இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படுவதற்காக நாங்க செயற்படுவோம். அதுவே தமிழ் மக்களின் முடிவென்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதற்காக நாங்கள் மிகவும் கடுமையாக உழைப்போம்.

கேள்வி: சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

பதில்: புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சுயாட்சி அமைப்பு சம்பந்தமான நிலைப்பாட்டிற்கு பின்னால் தற்போது சமாதான முன்னெடுப்புக்கள் ஓர் மந்தநிலையை அடைந்துள்ளது. புதிய அரசாங்கத்தினால் சிந்திக்கப்படுகின்ற புதிய அரசியல் சாசன திருத்த யோசனைகள் கூட எமக்கு ஏற்றதாக அமையாது. அது தமிழ்த்தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வாகவும் அமையாது. அதனைப்பற்றி அவர்கள் தீவிரமாக சிந்திப்பதாகவும் எமக்குத்தெரியவில்லை.

கேள்வி: சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் என்ன நடக்கும்?

பதில்: சமாதான முயற்சிகளை ஆரம்பிக்காமல் இருக்க முடியாது. அது முறையாக ஆரம்பிக்கப்பட வேண்டும். சமாதான முயற்சிகள் ஒரு போலித்தனமாக ஆரம்பிக்க முடியாது. அதனால் அவ்விடயம் சம்பந்தமாக நான் கருத்து கூறவிரும்பவில்லை. ஆனால் நிச்சயமாக எமது மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை. புலிகளும் தமிழ்தேசியப் பிரச்சினையை சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டும். என்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர். ஆகையால் இச்சூழலில் தற்போதைய நிலைமை நீண்ட காலத்திற்கு தொடர முடியாதென்பது எமது கருத்து.

கேள்வி: சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லப்போவதாக சனாதிபதி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றார். இது பற்றி உங்களின் கருத்து?

பதில்: அவரின் பேச்சுகளுக்கு நாங்கள் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவருடைய செயல்களின் அடிப்படையில் தான் நாங்கள் முடிவுகளை எடுக்கலாம். உதட்டளவில் எமக்கு சமாதானம் வேணும் நாங்கள் யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டோம் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்போம் என கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லையென நான் கருதுகிறேன் எனத் தெரிவித்தார்.


கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தின்

விசேட அறிவித்தல்

அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதிநாளான 19.4.2004 (திங்கள் ) வழமையான ஞாயிறு போல கடைகளைப்பூட்டி கிளிமுருகன் கோவிலடியில் அமைந்துள்ள நினைவுப்பந்தலில் இடம்பெறும் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு வர்த்தகர்கள் ,பணியாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

வர்த்தகர் சங்கம்
கிளிநொச்சி

(f-9449)


## பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச கலந்துரையாடல்

(ஒட்டிசுட்டான்)

பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச கலந்துரையாடல் வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள அதன் தலைமைப் பணிமனையில் 23 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் 2004, 2006 ற்கான புதிய திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இதில் பொருண்மிய மதியுரையகத்தின் வெளிநாட்டு கிளைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (05)

## மீனவரிடமிருந்து கடலுணவுகளை பறித்துச் சென்ற கடற்படையினர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் வசமிருந்த கடலுணவுகளை கடற்படையினர் பலவந்தமாகப்பறித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றஇச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது.

வழமைபோல மேற்படிகடற்பரப்பில் தொழிலாளர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த வேளை அப்பகுதிக்கு விசைப்படகு களில் வந்த கடற்படையினர் அவர்களிடம் இருந்த கடலுணவுகளை மிரட்டிப் பறித்துச் சென்றுள்ளனர் எனத்தெரியவருகிறது. (33)

### -கிளாலி முதல், கொழும்புத்துறைவரை-

## வெளியிணைப்பு இயந்திரப்படகுகளில் மீன்பிடிக்கப் படையினர் அனுமதி மறுப்பு

தென்மராட்சியின் கிளாலிப்பகுதி முதல், யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை வரையான குடாக்கடற்பரப்பிலும், கடல் நீரேரிப்பகுதியிலும் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பொருத்தி மீன்பிடியில் ஈடுபட தொடர்ந்தும் படைத்தரப்பு அனுமதி மறுத்துவருகின்றது.

இதனால் தொடர்ந்தும் அப்பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாய்மரங்களையும், ஊன்று தடிகள் மற்றும் துடுப்புக்களையும் பயன்படுத்தி குல்லா வள்ளங்கள் மூலமே சிறியளவிலேயே மீன்பிடித் தொழிலை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தென்மராட்சியின் கரையோரக்கிராமங்களான கிளாலி, கெற்பலி, கச்சாய் மற்றும் கோயிலாக்கண்டிப்பகுதி கடலில் குறித்த தூரத்திற்கு அப்பால் சென்று மீன்பிடியில் ஈடுபட படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்துவருகின்றது. இதனால் இக் கிராமங்களைச் சேர்ந்த ஐநூற்றிற்கும் அதிகமான மீனவக் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழேயே வாழ்வதாக தொண்டமைப்புக்களது பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (27)

## சிறிலங்காவில் தயாரிக்கப்பட்ட பவல்கள் கையளிப்பு வைபவம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரால் தயாரிக்கப்பட்ட ஐந்து பவல் வாகனங்கள் நேற்று அதிரடிப்படையிடம் கையளிக்கப்பட்டன. இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இந்த நிகழ்வில் பங்கு கொண்டார். இப் புதிய ரகபவல் வாகனத்தில் பின்னால் இருக்கும் படையினர் சாரதியுடன் தொடர்பு கொள்ளும் வசதியைக் கொண்டுள்ளது.

## பாரா.ளு. இல் எவ்வாறு நடந்துகொள்வது ஹெல உறுமய ஆராய்கிறதாம்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய தாம் நாடாளுமன்றத்தில் செயற்படும் விதம் குறித்து ஆராய்ந்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஒருவர் இருக்கையில் வந்து அமரும் போது தாம் அவருக்கு மரியாதை செலுத்துவது எவ்வாறு? அல்லது அவர் ஆசனத்தில் அமர்ந்த பின்னர் தாம் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதா? என்ற விடயங்களே ஆராயப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சபாநாயகர் போட்டியின் போது யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பாகவும் ஜாதிக ஹெல உறுமய இன்னமும் முடிவெடுக்கவில்லை என கூறப்படுகிறது. (32)

### தியாகி..

அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். 19 ஆம் திகதி வவுனியா பூந்தோட்ட பொது மைதானத்தில் கலை நிகழ்வுகளுடன் இசை நிகழ்ச்சியும் நடைபெற இருப்பதாகவும் வவுனியா மாவட்டத்திற்கான பொது நிகழ்வாக இது நடைபெறும் என்றும் தெரிவித்தார். அத்துடன் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (21)

### கரவெட்டி..

அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேறி ஏனையோரை வெட்டியதாகத் தெரியவருகிறது.

இதனிடையே கிராம மக்களிடையே சுமுக நிலையை ஏற்படுத்துவதில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரும் பொலிசாரும் நேற்றையதினம் ஈடுபட்டிருந்தனர். (27)


துயர் பகிர்கின்றோம்

ஞானச்செல்வம் கமலாதேவி

த.பொ. மே. நிறுவனத்தின் பல்லவன் அரைக்கும் ஆலை திட்டத்தின் முகாமையாளராகக் கடமையாற்றும் திரு. ஞா. யூட் சுஜீவன் (யூட்) அவர்களது தாயார் ஞானச்செல்வம் கமலாதேவி அவர்கள் 16-04-2004 அன்று மரணமடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினரது துயரில் நாம் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
மிதுஷன் குடியிருப்பு,
பூநகரி.

போராளிகள், பணியாளர்கள்,
த.பொ.மே. நிறுவனம்,
தமிழீழம்.

(4365)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது